**2022 Ontario Voting Guide – Tamil - Sri Lanka**

# ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தயாராகுங்கள்!

ஜூன் 2ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக உங்களின் Xஐ இடுங்கள்.

## தகுதி

ஒன்ராறியோ தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதற்கு உங்களுக்குப் பின்வருவன இருக்கவேண்டும்:

- தேர்தல் தினத்தன்று 18 அல்லது மேற்பட்ட வயது;
- கனேடியப் பிரஜாவுரிமை; மற்றும்
- ஒன்ராறியோவில் வதிவிடம்

## பதிவுசெய்தல்

மே 23 க்கு முன்பாக, eregistration.elections.on.ca என்ற வலைத்தளத்திலுள்ள வாக்காளர் பட்டியலில் உங்களின் தகவல்களை உறுதிசெய்யுங்கள், இற்றைப்படுத்துங்கள் அல்லது சேர்த்துக்கொள்ளுங்கள்.

பதிவுசெய்யவில்லை என்றாலும்கூட, நீங்கள் வாக்களிக்க முடியும். வாக்களிக்கச் செல்லும்போது உங்களின் தகவல்களை நேரில் வழங்குங்கள்.

## வாக்காளர் தகவல் அட்டை

வாக்காளர் பட்டியலில் உங்களின் பெயர் இருந்தால், எப்போது, எங்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பான தகவல்களைக் கொண்ட வாக்காளர் தகவல் அட்டை ஒன்று உங்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்படும். மே 13ஆம் திகதி முதல் வாக்காளர் தகவல் அட்டைகள் உங்களுக்குக் கிடைக்கப்பெறும்.



Voter Information Card
Carte d'information de l'électeur

Vote on Election Day — June 2, 2022, 9 AM to 9 PM (ET)
Vote on Election Day (FR) — 2 juin 2022, de 9 h à 21 h (HE)

Your voting location | Votre lieu de vote
*1234 NORTH WALSINGHAM - SOUTH
WALSINGHAM TOWNLINE RD
TORONTO ON M4P 0C6

Your electoral district | Votre circonscription électorale
LEEDS—GRENVILLE—THOUSAND ISLANDS
AND RIDEAU LAKES | LEEDS—GRENVILLE—
THOUSAND ISLANDS ET RIDEAU LAKES

Your registered address | Votre adresse inscrite
1234 NORTH WALSINGHAM - SOUTH
WALSINGHAM TOWNLINE RD
TORONTO ON M4P 0C5

Poll | Bureau de vote
#####

*Contact us about the accessibility of this location.
*Veuillez nous contacter pour toute question concernant l'accessibilité de ce lieu de vote.

Return address:
1234 NORTH
WALSINGHAM -
SOUTH WALSINGHAM
TOWNLINE RD
CITY ON E0E 0E0

CANADA POST POSTES CANADA

859-3956-20011-559312

JONATHAN SAMPLE
1234 NORTH WALSINGHAM
- SOUTH WALSINGHAM
TOWNLINE RD
TORONTO ON M4P 0C5

வாக்காளர் தகவல் அட்டை உங்களுக்குக் கிடைக்காவிட்டாலும்கூட, நீங்கள் வாக்களிக்க முடியும். உங்களின் பெயர் மற்றும் தற்போதைய வதிவிட முகவரி ஆகிய இரண்டையும் காட்டும் அடையாள அட்டை (ID) ஒன்றைக் கொண்டு வாருங்கள்.

உங்களின் தேர்தல் மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு இடங்கள் மற்றும் வாக்களிப்புத் திகதிகள் பற்றிய முழுமையான பட்டியலுக்கு, elections.on.caஐப் பார்வையிடுங்கள் அல்லது ஒன்ராறிரியோ தேர்தல்கள் பயன்பாட்டைப் (Elections Ontario app) பதிவிறக்குங்கள்.

## வாக்களிப்பதற்கான அடையாள அட்டை (ID)

உங்களிடம் வாக்களார் தகவல் அட்டை உள்ளதா?

ஆம் — உங்களின் பெயரைக் காட்டும் ஒரு அடையாள அட்டையைக் (ID) கொண்டுவாருங்கள்

இல்லை — உங்களின் பெயரையும் வதிவிட முகவரியையும் காட்டும் ஒரு அடையாள அட்டையைக் (ID) கொண்டுவாருங்கள்

நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது, உங்களின் அடையாள அட்டையின் (ID) மின்னணுப் பிரதி ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம், அது அச்சிடப்பட்டதாகவோ அல்லது எடுத்துச்செல்லக்கூடிய சாதனமொன்றில் காட்டப்படக்கூடியதாகவோ இருக்கலாம்.

புகைப்பட ID தேவையில்லை. நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்களின் பாலினம் அல்லது பாலின வெளிப்பாடு பற்றிய தகவல்கள் எதையும் நீங்கள் வழங்கத் தேவையில்லை.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ID என்பது பின்வரும் உதாரணங்களை உள்ளடக்குகிறது:

- ஒன்ராறியோ சாரதி உரிமம்
- ஒன்ராறியோ பட அட்டை
- கடன் அட்டை விபர அறிக்கை
- பயன்பாட்டுக் கட்டணச்சீட்டு
- குடியிருப்பு தொடர்பான உடன்படிக்கை
- பாடங்கள் மற்றும் தரங்கள் பற்றிய முறையான மாணவர் பதிவேடு (transcript)

நேரில் வாக்களிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைகள் (ID) பற்றிய பட்டியலை elections.on.ca/id-requirements இல் கண்டறியுங்கள்.

## எங்களுக்காக வேலைசெய்வதற்கு வாருங்கள்

இந்தத் தேர்தலில் பணியாற்றுவதற்கு விண்ணப்பியுங்கள்!

நீங்கள் 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஒருவராக இருந்தால், முன்கூட்டியே வாக்களிக்கும் நாட்களில் அல்லது தேர்தல் நாளில் தேர்தல் அதிகாரியாகப் பணிபுரிவதற்கு

விண்ணப்பிக்க முடியும். தேர்தலில் பணியாற்றுவதன் மூலம், வாக்களித்தல் அனைவருக்கும் இலகுவானதாக இருப்பதற்கு உதவுகிறீர்கள்.

அனைத்துப் பதவிகளுக்கும் ஊதியம் வழங்கப்படுகிறது, அத்துடன் பணியாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக மேலதிகமான சுகாதார நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

மேலதிக தகவல்களுக்கு, jobs.elections.on.ca ஐப் பார்வையிடுங்கள்.

## Elections Ontario app (ஒன்ராறிரியோ தேர்தல்கள் பயன்பாடு)

எங்களின் புதிய mobile app மூலம் தனிப்பயனாக்கப்பட்ட தேர்தல் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

Elections Ontario appஐப் பதிவிறக்குவதுடன், அணுகுவதற்கான கணக்கொன்றை (account) உருவாக்குங்கள்:

- ஸ்கான் செய்யப்படக்கூடிய உங்களின் வாக்காளர் அட்டைப் பிரதி
- நீங்கள் வாக்களிக்கக்கூடிய இடங்கள் மற்றும் திகதிகள் பற்றிய முழுமையானதொரு பட்டியல்
- தனிப்பயனாக்கக்கூடிய தேர்தல் அறிவிப்புகள்
- உங்களின் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பாளர்களின் பட்டியல்

## முன்கூட்டியே வாக்களியுங்கள்

- தபால் மூலம்
    - தபால் மூலம் வாக்களிப்பதற்கு votebymail.elections.on.ca என்ற வலைத்தளத்தில் விண்ணப்பியுங்கள் அல்லது elections.on.ca என்ற

வலைத்தளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து அதனை அச்சிலெடுங்கள்.
    - மே 27, மாலை 6 மணிக்கு (Eastern Time) முதல் உங்களின் விண்ணப்பம் ஒன்ராறியோ தேர்தல்கள் அமைப்புக்குக் கிடைக்கவேண்டும்
    - கணக்கிடப்படுவதற்காக, பூர்த்திசெய்யப்பட்ட உங்களின் வாக்குச் சீட்டு, ஜூன் 2, மாலை 6 மணிக்குள் (Eastern Time) ஒன்ராறியோ தேர்தல்கள் அமைப்புக்குக் கிடைக்க வேண்டும்
    - தபால் மூலம் நீங்கள் வாக்களிப்பதற்குத் தேவையான ID வித்தியாசமானது. elections.on.ca/id-requirements இல் மேலும் அறியுங்கள்
- உங்களுடைய தேர்தல் அலுவலகத்தில் (returning office)
    - உங்களின் தேர்தல் அலுவலகம் என்பது உங்களின் தேர்தல் மாவட்டத்துக்கான உள்ளூர்த் தேர்தல் அலுவலகமாகும்
    - மே 5 முதல் ஜூன் 1, மாலை 6 மணி வரை (Eastern Time) உங்களின் தேர்தல் அலுவலகத்தில் நேரில் வாக்களியுங்கள்
    - உங்களின் வாக்காளர் தகவல் அட்டையில் அல்லது voterinformationservice.elections.on.ca இல் உங்களின் தேர்தல் அலுவலகத்தைக் கண்டறியுங்கள்
- முன்கூட்டிய வாக்களிப்பின்போது
    - உங்களின் தேர்தல் மாவட்டத்தில் இருக்கும் முன்கூட்டியே வாக்களிக்கக்கூடிய நிலையங்கள் எதிலாவது, மே 19க்கும் 28க்கும் இடையில், காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (Eastern Time) வாக்களியுங்கள்
    - வாக்களிக்கும் இடங்கள் மற்றும் திகதிகள் பற்றிய முழுமையான பட்டியலை voterinformationservice.elections.on.ca இல் கண்டறியுங்கள்

## தேர்தல் தினமன்று வாக்களித்தல்

- உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வாக்களிப்பு இடத்தில், ஜூன் 2 அன்று, காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை (Eastern Time) வாக்களியுங்கள்.

- உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வாக்களிப்பு இடத்தை உங்களின் வாக்காளர் தகவல் அட்டையில் அல்லது Elections Ontario app இல் அல்லது voterinformationservice.elections.on.ca இல் கண்டறியுங்கள்.

## அணுகல்

உங்களுக்குக் கிடைக்கக்கூடிய அணுகைக்கான சில கருவிகள் மற்றும் சேவைகள் இதோ.

உங்களின் தேர்தல் அலுவலகத்தில்:

- மே 21 முதல் ஜூன் 1 வரை அல்லது தேர்தல் தினத்தன்று நியமனம் ஊடாக வாக்களிக்க உதவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துங்கள்
- வீட்டுக்கு வரவழைத்து வாக்களிப்பதை அல்லது உங்களின் வாக்களிக்கும் இடத்துக்கு வெளியே அணுகக்கூடிய வகையில் வாக்களிப்பதைக் கோருவதற்காக உங்களின் தேர்தல் அலுவலகத்தை அழையுங்கள்
- அணுகல் தொடர்பான உங்களின் தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்திசெய்யக்கூடிய வாக்களிக்கும் இடமொன்றுக்கான இடமாற்றத்தைத் தேர்தல் நாளுக்கு முன்பாகக் கோருங்கள்

உங்களின் வாக்களிப்பு நிலையத்தில்:

- அமெரிக்கச் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் ஒருவரை அல்லது இடையீட்டாளரை முன்பதிவு செய்யுங்கள், அதற்கான செலவை நாங்கள் வழங்குவோம்
- உங்களின் எடுத்துச்செல்லக்கூடிய சாதனம் (mobile device) ஒன்றை அணுகைக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துங்கள்
- உருப்பெருக்கி (magnifier) ஒன்றை அல்லது braille வாக்குச் சீட்டு ஒன்றைக் கோருங்கள்
- உதவிக்காக ஒரு நண்பரை, ஆதரவளிக்கும் நபரை அல்லது சேவைபுரியும் விலங்கொன்றைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்
- elections.on.ca இல், 30க்கும் மேற்பட்ட மொழிகளில் வாக்களிப்பது தொடர்பான அறிவுறுத்தல்களையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்

தேர்தல்கள் ஒன்ராறியோவின் தள அணுகல் தரநிலைகளை வாக்களிப்பு நிலையங்கள் யாவும் முடிந்தவரை பூர்த்திசெய்ய வேண்டும்.

கோரப்பட்டால், வாக்களித்தல் தொடர்பான தகவல்கள் மாற்று வடிவங்களில் கிடைக்கும்.

உங்களின் வாக்களிப்பு நிலையத்தை மற்றும் ஏனைய சேவைகளை அணுகுதல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு, elections.on.ca/accessible-voting ஐப் பார்வையிடுங்கள்.

## COVID-19

வாக்களிப்பின்போது, வாக்காளர்கள் மற்றும் எங்களின் பணியாளர்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக சுகாதாரத்துக்கான தலைமை மருத்துவ அதிகாரியின் அலுவலகத்துடன் இணைந்து நாங்கள் பணியாற்றுகிறோம். அத்துடன், பொதுச் சுகாதாரப் பிரிவுகள் மற்றும் நகராட்சிகள், மாகாணத்தின் COVID-19 தடுப்பு நடவடிக்கைகளுடன், வேறு COVID-19 சுகாதார நடவடிக்கைகளையும் தங்களின் பிராந்தியங்களில் செயற்படுத்தக்கூடும்.

நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது, அந்த நேரத்தில் கிடைக்கும் சிறந்த தகவல்களின் அடிப்படையிலான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருப்பதைக் காண்பீர்கள்—இதில் முகக்கவசங்கள், உடல்ரீதியான இடைவெளி, கைச் சுத்திகரிப்பு மற்றும் plexiglass தடுப்புக்கள் ஆகியவை அடங்கலாம்.

### எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்

- வலைத்தளம்: elections.on.ca
- தொலைபேசி: 1.888.668.8683
- செவிப்புலனற்றோருக்கான தொலைபேசி: 1.888.292.2312
- மின்னஞ்சல்: info@elections.on.ca
- Twitter: @ElectionsON
- Facebook: ElectionsON
- Instagram: @electionson